நகரமன்றம் குடியாத்தம் நாள் : 20 .11.2019

# அறிவிப்பு

**2019–ம் ஆண்டு நவம்பர் மாதம் 22–ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை:திரு.: எச்.இரமேஷ்,பி.எல்.,நகரமன்றதனிஅலுவலர்**

## கூட்டநிரல்

1.பொது சொத்துவரி சீராய்வு 2018 தொடர்பாக சொத்துவரி சீராய்வினை ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை முதன்மைச் செயலர் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட கீழ்காணும் அரசாணை விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

1. அரசு ஆணை(நிலை) எண்.150 ந.நி மற்றும் கு.வ (நநிIV) துறை நாள்:19.11.19
2. G.O.(MS)No.150, MA&WS(MA.IV) Dated: 19.11.2019

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. பொது சொத்துவரி சீராய்வு 2018 தொடர்பான பணிகள் அரசாணையில் தெரிவித்தவாறு நிறுத்தி வைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:** அ2/1819/2018

**நகரமன்ற தீர்மானம் எண்.426 நாள் : 22.11.2019**

2. பொது சொத்துவரி சீராய்வு 2018 நிறுத்தி வைப்பு செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.150, ந.நி.மற்றும் கு.வ. துறை நாள்:19.11.2019-ஐ தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.40032/2012/R1 நாள்: 20.11.19-ன் படி பொது சொத்துவரி சீராய்வு 2018 மண்டல வழிகாட்டி மதிப்பு மற்றும் மறுஅளவீட்டு பணிகள் தொடர்பாக மாற்றி அமைக்கப்பட்ட சொத்துவரியினை நிறுத்திவைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்தவாறு சொத்துவரி சீராய்வு தொடர்பான பணிகள் நிறுத்தி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பழைய சொத்துவரி கேட்பிற்கும் தற்போது திருத்திய அனைத்து வகையான சொத்துவரி கேட்பிற்கும் அதனுடன் தற்போது வரி விதிப்புதாரர்கள் செலுத்தப்பட்ட திடக்கழிவு பயன்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத் தொகையானது வருங்காலத்தில் செலுத்த வேண்டிய சொத்துவரி கேட்பில் ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** அ2/1819/2018

**நகரமன்ற தீர்மானம் எண்.427 நாள் : 22.11.2019**

3. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு, மழைநீர் சேகரிப்பு, மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை பிரித்து வழங்குதல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு போன்றவைகளை TATA ACE மூலம் LED TVயில் விளம்பரம் செய்யும் பணிக்கு விலைப்புகள் 01.10.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விவரம் TATA ACE மூலம் LED TVயில் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு ரு | 15 நாட்களுக்கு உண்டான மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | Mohan Publicity's<br>Audio & Video Ads<br>LED WALL ADVERDISING<br>No.1, V.O.C Street, Opp: Shiva, Shiva koil,<br>Nadupet, Gudiyatham. | ரு.2,500/- | ரு.37500/- |
| 2. | Kalai Ads,<br>No.4, Kosa, Annamalai Street,<br>Ambapuram, Gudiyatham. | ரு.2,600/- | ரு.39000/- |
| 3. | JJ Ads<br>Congress House Road,<br>Then Kulakkarai, Gudiyatham. | ரு.2,750/- | ரு.41250/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளின் வ.எண்.1-ல் கண்டுள்ள Mohan Publicity's, Gudiyatham என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் குறைந்த விலைப்புள்ளி அளித்த Mohan Publicity's, Gudiyatham என்ற நிறுவனத்திற்கு பணியினை ஒப்படைக்கலாம். மேலும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும் அதற்கான செலவு தொகையை பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மானம் எண்.428 நாள் : 22.11.2019**

4. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN 23 BQ 2790 -க்கு பேட்டரி பழுதடைந்து விட்டதால் புதிதாக பேட்டரி வாங்குவதற்கு 13.11.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரு. |
|---|---|---|
| 1 | வேலூர் பேட்டரி சென்டர்<br>19, காட்பாடி ரோடு, வேலூர். | ரு.8,900/- |
| 2 | தி ஆட்டோ டீசல் சர்வீஸ்<br>67ஏ, காட்பாடி ரோடு, வேலூர். | ரு.9,050/- |
| 3 | வேலூர் பேட்டரி சென்டர்<br>2/ஏ, புதிய காட்பாடி ரோடு,<br>(ஆரியஸ் ஓட்டல் அருகில்) வேலூர். | ரு.9,200/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட வரிசை எண். 1 வேலூர் பேட்டரி சென்டர், வேலூர் என்ற நிறுவனத்தினை ஏற்று அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**ந.க.எண். 3081/2019/எச்1**

**நகரமன்ற தீர்மானம் எண்.429 நாள் : 22.11.2019**

5. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனுமதி பெறாத மனப்பிரிவுகளை, தமிழக அரசு அறிவித்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகள் (ம) மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017–18 ன் கீழ் பின்வரும் மனைப்பிரிவுகளில் அமைந்து , ஏற்கனவே 20.10.2016 ம் தேதிக்கு முன் விற்பனை செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்ட தனித்த குடியிருப்பு மனைகளை வரன்முறைப்படுத்தி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், வேலூர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கீழ்காணும் 02 ( இரண்டு )அனுமதிற்ற மனைப்பிரிவு விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | மனைப்பிரிவு பெயர் | வார்டு எண் | பிளாக் எண் | நகரளவு எண்கள் | மொத்த மனைகள் | நகர் ஊரமைப்பு துறை அனுமதி விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அனுமதி எண் | கடித எண் | அனுமதி நாள் |
| 1 | போஸ்பேட்டை தெய்வானை நகர் | 5 | 14 | 894 பகுதி (ம) 895 பகுதி | 65 | 428/ 2019 | 6446/2018/ வே.ம.3 | 21.10.2019 |
| 2 | செதுக்கரை ஜெ.ஜெ.நகர் | 7 | 02 | 373 பகுதி (219,243) | 60 | 429/ 2019 | 6446/2018/ வே.ம.3 | 21.10.2019 |

**அலுவலக குறிப்பு.**

(அ) 1.அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 04.05.2017,
2.அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 13.10.2017,
3.அரசாணை (நிலை) எண்.55,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 02.05.2018,
4.அரசாணை (நிலை) எண்.21,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 05.02.2019,

ஆகிய நான்கு (04) அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின் படி , 14.12.2018 ம் தேதி வரை ஆன் லைனில் பதிவுச் செய்யப்பட்ட விவர ஒப்புகை நகலுடனும், மேற்படி தேதிக்கு பின் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனையின் உரிமையாளர்கள் சின்டிகேட் வங்கி கணக்கில் ரூ.500.00 செலுத்தி உரிய விண்ணப்பம் செய்தும் ,

1. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00(04.11.2018 க்கு முன்) / 66.00 (04.11.2018 முதல் 03.05.2019) / 75.00 (04.05.2019 முதல் 03.11.2019) / 90.00 04.11.2019 க்கு பின்) வீதம் அரசு கணக்கு தலைப்பில் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்ட ரசீது நகல் ,
2. வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் நகராட்சி கணக்கில் செலுத்தப்பட்ட ரசீது நகல் , ஆகியவைகள் பெறப்பட்ட பின்பு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படவுள்ளதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நிபந்தனைகள்**

1. இந்த வரன்முறை உத்தரவு தொடர்புடைய மனை எண்ணுக்கு மட்டுமே பொருந்தும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என பின் வரும் நாட்களில் கண்டறியப்பட்டால் தொடர்புடைய மனை எண்ணுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் அம்மனைக்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் வித்தியாச கட்டணம் மனைப்பிரிவு உரிமையாளரால் மீள செலுத்தப்படவேண்டும்.
4. இம்மனைக்கான வழங்கப்பட்ட உத்தரவு வேறு மனைகளுக்கு மாற்றத்தக்கதல்ல.

(ஆ) இம்மனைப்பிரிவில் பொது சாலையாக காண்பிக்கப்பட்ட இடங்களை நகராட்சி ஏற்று பராமரிக்கவும் , இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் தொகையில் அரசின் அனுமதி பெற்று , அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின்கம்பம் அமைத்தல் மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்தல் ஆகிய பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 836 /2018/எப்.1)

**நகரமன்ற தீர்மானம் எண்.430 நாள் : 22.11.2019**

6. குடியாத்தம் நகராட்சி சொந்தமான TN23M6975 ஈப்புவாகனத்திற்கு அனைத்து பழுதுகளையும் சரி செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | Vinoth car tinkering & Gas welding workshop, Gudiyatham | Sri Athilakshmi Auto Garage, Gudiyatham | Sivam Auto Parts, Vellore |
|---|---|---|---|---|
| 1. | அனைத்து பழுதுகளையும் சரி செய்யும் பணி | 98790.00 | 108200.00 | 110960.00 |
| | **மொத்தம்** | **98790.00** | **108200.00** | **110960.00** |

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள Vinoth Car tinkering and Gas welding workshop, Gudiyatham அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகை ரூ.98,790/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.இ1/2078/2019)

**நகரமன்ற தீர்மானம் எண்.431 நாள் : 22.11.2019**

7. இந்நகராட்சியில் ஆயுதபூஜை, தீபாவளி பண்டிகையொட்டி நகராட்சி திட்டபணிகள் குறித்த விளம்பரம் கீழ்க்காணும் நாளிதழ்களில் வெளியிட்டமைக்கு விளம்பர நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற செலவின பட்டியல் தொகை ரூ.24,975/-ஐ கீழ்க்காணும் விளம்பர நிறுவனங்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Kalpulication (Tamilmurasu) | - | ரூ. 9,975 |
| 2. | Two Leaf Mediaa (நமது அம்மா) | - | ரூ.15,000 |
| | **மொத்தம்** | - | **ரூ.24,975** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.இ1/2078/2019

**நகரமன்ற தீர்மானம் எண்.432 நாள் : 22.11.2019**

8. இந்நகராட்சியில் TURIP 2019-20 திட்ட ஒப்பந்தபணிகள் குறித்த அறிவிக்கை மாநில அளவில் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு " Elegant Publicities, Chennai நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விளம்பர கட்டணத்தொகை ரூ.87,476/-ஐ மேற்காணும் Elegant Publicities, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.இ1/2238/2019

**நகரமன்ற தீர்மானம் எண்.433 நாள் : 22.11.2019**

9. குடியாத்தம் நகராட்சி ஆணையர் குடியிருப்பிற்கு தேவையான 1100VA UPS, 200AH பேட்டரி, டெலிபோன் இணைப்புக்கு தேவையான D-Link Modem, HP wireless keyboard & mouse மற்றும் அலுவலகத்தின் முதல் தளத்தில் CP Plus HD bullet camera பொருத்தும் பணிக்கு விலைப்புள்ளி

கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | PSR Systems, Gudiyatham | Sivam Infotech, Gudiyatham | Royal Info Systems, Gudiyatham |
|---|---|---|---|---|
| 1 | ஆணையர் குடியிருப்பு மற்றும் அலுவலக பணிக்கு தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் | 39,450.00 | 42,7500.00 | 44,450.00 |
| | **மொத்தம்** | **39,450.00** | **42,7500.00** | **44,450.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ரூ.39,450/-ஐ வழங்கியுள்ள PSR Systems, குடியாத்தம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **கோப்பு எண்:-** இ1/2078/2019

**நகரமன்ற தீர்மானம் எண்.434 நாள் : 22.11.2019**

**10.** இந்நகராட்சி கணினி வரிவசூல் பிரிவில் பயன்படுத்தப்பட வேண்டிய கணினி ரசீதுகள் 2019–2020 ஆம் ஆண்டுக்கு அரசுஅங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிய தொகைசெலவு ரூ.2,88,000/– நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0676/பி4/18)

**நகரமன்ற தீர்மானம் எண்.435 நாள் : 22.11.2019**

**11.** இந்நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் 2019 மேற்கொள்ளப்பட வேண்டியதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.35.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.சி1/461/2019)

**நகரமன்ற தீர்மானம் எண்.436 நாள் : 22.11.2019**

12. குடியாத்தம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான WaterCooler with Hot Water facility-1No. & Supply of Wooden stage 3X3 feet size for Collection Centre – 3Nos. சப்ளை செய்தல் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | Description | J.J.Anandakumar ,Gudiyatham | S.Sivakumar, Gudiyatham | DCN Construction, Gudiyatham |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Water Cooler மற்றும் அமரு | Supply & Delivery of WaterCooler with Hot Water facility including transportation charges | 9200.00 | 9450.00 | 9350.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேடை கொள்முதல் செய்வது | Supply of Wooden stage 3X3 feet size for Collection Centre | 9850.00 | 9950.00 | 9900.00 |
| **மொத்தம்** | | | **19050.00** | **19400.00** | **19250.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள J.J.Anandakumar,குடியாத்தம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/2078/2019

**நகரமன்ற தீர்மானம் எண்.437** **நாள் :** 22.11.2019

**தனிஅலுவலர் / ஆணையர்,**
**குடியாத்தம் நகராட்சி.**